## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹெக்டர் ஹொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிலையத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிலையத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிலையத்தின் அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிலையம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிலையத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலையத்தின் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிலையத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிலையத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிலையம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிலையத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

| குறித்த நியமங்களுடனான இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 48 ஆவது பந்தியின் பிரகாரம் நியமங்களினூடாக தேவைப்படுத்தப்பட்டால் அல்லது அனுமதி அளிக்கப்பட்டால் அன்றி சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள் எதிரீடு செய்யப்பட முடியாத போதிலும் முன்னைய வருடங்களில் பல்வெஹர சுற்றுலா விடுதியினை திருத்தியமைத்தல் மற்றும் பராமரிப்பிற்காக தம்புள்ள பிரதேச செயலாளரினால் மீளச் செலுத்த வேண்டிய ரூபா 1.962,545 ஆனது அச் சுற்றுலா விடுதிக்காக 2011 திசெம்பர் 12 இலிருந்து 2019 திசெம்பர் 12 ஆந் திகதி வரையில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,000,000 ஆன வாடகைக்காக எதிரீடு செய்யப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தது. இத்தொகை மீளச் செலுத்தப்படுவதற்கான பயனுள்ள செயன் முறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப் பணத்தை மீளச் செலுத்துவதற்காக தம்புள்ள பிரதேசச் செயலாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், 2020 ஆகஸ்ட் 11 ஆந் திகதி 5/3/9/3/28 ஆம் இலக்க கடிதம் மூலம் அவரது ஒப்புதல் வழங்கப்படவில்லை. மேலும் பல விடயங்களைக் குறிப்பிட்டு 2021 ஏப்ரல் 19 ஆந் திகதி AD/2/5/0/08 ஆம் இலக்க கடிதம் தம்புள்ன பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தொடர்ந்தும் இத்தொகையை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அனுமதிக்கப்பட்டால் அன்றி வருமானங்கள் மற்றும் செலவுகள் எதிரீடு செய்யப்பட முடியாது என்பதுடன் திருத்தச் செலவுகள் மீளச் செலுத்தப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஒக்தோபர் 08 ஆந் திகதியிலிருந்து 2020 திசெம்பர் 31 வரையில் பிரதம மந்திரி அலுவலகத்தின் பாதுகாப்பு அலுவலர்களுக்கு அறை வசதிகள் வழங்கப்பட்டமைக்காக பிரதம மந்திரி அலுவலகத்திடமிருந்து ரூபா 1,363,000 அறவிடப்பட வேண்டியிருந்தமை பதிவாளரினால் 2021 பெப்ரவரி 11 ஆந் திகதி பிரதம மந்திரியின் மேலதிகச் செயலாளருக்கு அனுப்பிய இலக்கம் 10/01/82(v) | இந்த பிரதம மந்திரி அலுவலகத்தின் அலுவலர்களுக்கு அறைகள் வழங்கியமைக்கான பற்றுச்சீட்டு தயாரிக்கப்பட்டமை 2021 ஆம் வருடத்தில் நடை பெற்றமையால் 2020 ஆம் வருடத்தின் கணக்குகளில் காட்டுவதற்கு முடியவில்லை. இவ் வருமானத்திற்கான சீராக்கல் 2021 ஆம் வருடத்தில் செய்யப்படும். | வருமானங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆன கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத்தொகை மீளாய்வாண்டில் பெற வேண்டிய வருமானமாகக் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணத்தினால் விடுதி வருமானம் மற்றும் பெற வேண்டிய வருமானம் என்பன அப் பெறுமதியால் குறைத்தக் காட்டப்பட்டிருந்தது. | | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 இல் ரூபா 25,508,310 ஆன மொத்தக் கடன்பட்டோர் மீதியில் வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களுக்கான கடன்பட்டோர் மீதிகளில் ருபா 610,215 ஆனது 5 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது இக் கடன் மீதியில் ருபா 482,304 ஆன தொகை ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தமை கணக்காயவின் போது அவதானிக்கப்பட்டது. | வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களுக்கான கடன்பட்டோரின் 5 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகள் ஏற்பட்ட முறை தொடர்பாக விரிவாகக் காட்டப்பட்டிருந்தது | அறவிடப்பட வேண்டிய மீதிகள் விரைவில் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) 2020 திசெம்பர் 31 இல் நிறுவனத்தின் 2002 ஆம் வருடத்திற்கு முன்பிருந்து காணப்படும் வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களுக்கான கடன்பட்டோரிடமிருந்து ருபா 12,874,881 ஆன தொகையொன்று அறவிடப்பட வேண்டியதாக காணப்படுவதுடன் அதை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | 2020 திசெம்பர் 31 இல் நிறுவனத்தின் வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களுக்கான கடன்பட்டோரிடமிருந்து ருபா 12,874,129 ஆன தொகை மட்டும் அறவிடப்பட வேண்டியிருந்தது. நிறுவனத்தினால் கடந்த பத்து வருடத்திற்குள் வெளிநாட்டு புலமைப்பரிசில்களுக்கான கடன்பட்டோர் தொடர்பான விசேட கவனம் எடுக்கப்பட்டு அது தொடர்பாக விவேகத்துடன் செயற்பட்டமையால் இந்த அனவிற்கு கடன் மீதிகள் குறைவடைந்திருந்தது. | பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் மற்றும் பணம் அறவிடப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2006 சனவரி 03 ஆந் திகதி சட்டமா அதிபருக்கு வழக்குத் தொடர்வதற்காகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான கடிதம் இல்லாமையால் வெளிநாட்டு புலமைப்பரிசில்களுக்கான கடன்பட்டடோரான ஆராய்ச்சி அலுவலர் எம்.எஸ்.கௌரி சங்கர் என்பவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முடியாமையால் அவரது 2019 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய ரூபா 3,634,110 ஆன தொகையில் எவ்வித தொகையும் 2020 ஆம் வருடத்திற்குள் அறவிடப்படுவதற்கு முடியாது இருந்தததுடன் அக் கடிதத்தை கண்டுபிடிப்பது தொடர்பாக நிறுவனத்தில் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அவரது தற்போதைய கடிதத்தை கண்டு பிடிப்பதற்குகு முடியாத காரணத்தினால் அறிவுறுத்தல் கடிதம் (Letter of Demand) அனுப்புவதற்கு முடியாதிருந்தது. ஆனால் நிறுவனத்தால் அக் கடித்தை கண்டு பிடிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் அவை போதியளவாக இருக்கவில்லை. | கடிதத்தை கண்டு பிடிப்பதுடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய ரூபா 17,207,081 ஆன கடன் கொடுத்தோர் மீதியில் ரூபா 626,737 ஆன 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகத் தீர்க்கப்படாதிருந்த மீதிகள் காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | நிறுவனத்தின் 5 வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 626,737 ஆன கடன் கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக விரிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகளுக்கு உரிமை கோருபவர்கள் கிடைக்காத நிலையில் பொருத்தமான சீராக்கங்கள் செய்யப்படவில்லை. |

1.7 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நி.பி. 756 | 2020 ஆம் வருடத்தில் நூல் நிலையப் புத்தகங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2020 ஆம் வருடத்தில் நூல் நிலையப் புத்தங்கள் கணிப்பீட்டின் வரைவு அறிக்கை காணக்காய்விற்கு சமாப்பிக்கப்படவில்லை. | நூல் நிலையப் புத்தகங்கள் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்காய்விற்கு அறிக்கையின் பிரதி ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவு ருபா 16,201,196 ஆன பற்றாக்குறை என்பதுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ருபா 2,065,352 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ருபா 14,135,844 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவிற்கு முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் அரசின் மானியம் ருபா 20,260,250 ஆல் குறைவடைந்தமை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக பெறப்பட்ட மூலதன மானியம் ரூபா 15,194,579 ஆல் குறைவடைந்தமைஇ ஏனைய வருமானம் ரூபா 12,219,495 ஆல் குறைவடைந்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் ஏனைய வருமானம்இ அரச மானியம் இ மூலதன மானியம் இ ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொண்ட நிதியம் முறையே நூற்றுக்கு 38,12,97 மற்றும் 43 வீதத்தினால் குறைவடைந்திருந்தது. மேலும் ஊழியர்களின் சம்பளம் மற்றும் பயிற்சி செலவுகள் முறையே நூற்றுக்கு 5, 90, 43 மற்றும் 41 வீதத்தினால் குறைவடைந்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வருமானம் மிகை நூற்றுக்கு 8.08 ஆல் வீதத்தால் அதிகரித்திருந்ததுடன் நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் முறையே நூற்றுக்கு 0.23 வீதத்தால் மற்றும் நூற்றுக்கு 0.28 ஆல் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்றிறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 - 2015 ஆன காலப்பகுதிக்குள் ரூபா 1,031,020 ஆன கிரயமொன்று செலவிடப்பட்டு பிரதான அலுவலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த உயிரியல் வாயு அலகு 2016 ஆம் வருடத்திலிருந்து செயலிழந்து காணப்பட்டதுடன் அதற்காக 2018 ஆம் வருடத்தில் ரூபா 22,500 முற்பணம் செலுத்தி பலுான் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அலகின் ஏனைய சாதனங்களில் குறைபாடு காணப்பட்டதால் அந்த பலுான் ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 வரையில் அலகின் மொத்தச் செலவுகள் ரூபா 1,053,520 ஆக இருந்தது. அது நீண்ட காலமாகத் திருத்தங்கள் இன்றி காணப்பட்டதால் அதன் உதிரிப்பாகங்கள் செயலற்று மேலும் பாவனைக்கு உட்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. | இம் முற்பணத் தொகையை தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் இந்த உயிரியல் வாயு அலகு தொடர்பாக நி.பி 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்பாளர் குழுவொன்றை நியமிக்கப்பட்டதுடன் அக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கப்படும். | பொருத்தமான வகையில் பயன்பாட்டிற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2015, 2016,2018 மற்றும் 2019 ஆம் வருடங்களில் ரூபா 4,453,000 செலவிடப்பட்டு நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட 07 ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் 01 வருடத்திலிருந்து 05 வருடங்கள் வரையான காலப் பகுதியை எடுத்திருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 வரையில் முடிக்கப்படவில்லை. இந்த நிலைமையினால் காலத்தின் தேவை அடிப்படையில் மேற் கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சி செயற் திட்டங்கள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் குறிப்பிட்ட பரிந்துரைகள் தேவையான தரப்பினருக்கு வழங்கப்படவில்லை. | தற்போதைய முன்னேற்றம் விபரமாக காட்டப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆராய்யச்சி செயற்திட்டம் விரைவில் முடிக்கப்படல் வேண்டும். |
| (இ) | விவசாய அமைச்சின் பாதுகாப்பு அலுவலர்களுக்காக விடுதியின் அறைகளை வாடகைக்கு விடப்பட்டமைக்காக 2015 செப்டெம்பர் இலிருந்து 2018 யூலை மாதம் வரையிலான காலத்திற்கு | பணிப்பாளரினால் 2019 யூலை 10 ஆம் திகதிய R/Info/5 ஆம் இலக்க கடிதம் மூலம் இது தொடர்பான தகவல்களைக் கண்டறிவதற்கு நிறுவகத்தின் மூன்று | வாடகைப்பணத்தை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிட வேண்டிய ரூபா 8,895,470 ஆன தொகையை அறவிடுவதற்குகான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அக் குழுவின் அறிக்கை 2019 செப்டெம்பர் 02 அந் திகதி பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. அக் குழுவின் அறிக்கை மூலம் அறவிடப்பட வேண்டிய பெறுமதியான இனங்காணப்பட்ட ரூபா 8,895,470 ஆன பெறுமதியை அறவிடப்படுவதற்கான செயன் முறைகள் தொடர்பாகக் கருத்திற் கொள்வதற்கு 2021 பெப்ரவரி 24 ஆந் திகதிய R/Info/5–II ஆம் இலக்க கடிதத்தின் மூலம் புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டது. 2021 ஏப்ரல் 19 ஆந் திகதி அக் குழுவின் அறிக்கை பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் குறிப்பிட்ட பணத்தை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் முடிக்கப்பட்டு வெளியிடப்பட வேண்டிய 10 ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் முடிக்கப்படாமையுடன் ஆனால் அவை வரைவு வருடாந்த அறிக்கையில் முடிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆராய்ச்சி செயற்திட்டமொன்றின் தரவுப் பகுப்பாய்வின் போது அறிக்கை தயாரிக்கப்படும் போது ஆராய்ச்சி அலுவலகரின்னால் அச் செயற்திட்டம் தொடர்பான கண்டு பிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் சமா்ப்பிக்கப்பட்டிருந்தது. அதாவது அக் கண்டு பிடிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தேவையான முடிவுகளை எடுப்பதற்காக சமா்ப்பிக்கப்பட்டிருந்தது.<br>ஆனால், அராய்சிச் செயன் முறைகளில் நூற்றுக்கு 60 வீதத்திலிருந்து நூற்றுக்கு 100 வீதத்திற்கு இடையே பௌதீக முன்னேற்றமொன்று காட்டப்பட்டிருந்தமையால் அதற்கான அறிக்கை தயாரிக்கப்பட்டு அதைப் பிரசுரித்தல் மட்டுமே போதுமானது.<br><br>இதன் பிரகாரம் வருடாந்த அறிக்கையில் செயலாற்றல் சமா்ப்பிக்கப்பட்ட போது ஆராய்ச்சி செயற்திட்டம் ‘‘மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை’’ மற்றும் முடிக்கப்பட்டவை ஆகிய 02 பிரிவுகளின் கீழ் சமா்ப்பிக்கப்படுகின்றது. இதில் | 2020 ஆம் வருடத்தில் முடிக்கப்பட்ட ஆராய்ச்சிச் செயற்திட்டம் தொடர்பாக மட்டும் அந்த வருடத்தின் செயலாற்றுகை அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முடிக்கப்பட்டவையின் பிரகாரம் ஆராய்ச்சியாளரின் புதிய ஆராய்ச்சிக் கண்டு பிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை சமர்ப்பிக்கும் மட்டமாகும்.அதன் பிரகாரம் 2020 இன் வருடாந்த அறிக்கையில் இந்த அனைத்து ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகள் பிரசுரிக்கப்ாடாத (Published) போதிலும் அந்த ஆய்வுகளுக்கான கண்டு பிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படுகின்ற நிலையில் காணப்பட்டன.<br>இதனால் மேற்கூறப்பட்ட அனைத்து ஆய்வுகளும் 2020 இன் நிர்வாக அறிக்கை தயாரிக்கப்படும் வரையில் அதாவது 2021 மார்ச் மாதமளவில் முடிக்கப்பட்ட ஆராய்ச்சிச் செயற்திட்டங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன.மேலும் இந்த அறிக்கை ஆராய்ச்சிச் செயல்முறையின் இறுதிக் கட்டமாகும். அதாவது (60%-100%) இற்கு இடையிலான முன்னேற்றமொன்றைக் காட்டுகின்றது. | |

**3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் வருடத்தில் ரூபா 89,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட கமரா ஒன்று 2020 யூலை 14 ஆம் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது நிறுவகத்தில் காணப்படாமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நி.பி 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் வருடத்தில் நிறுவகத்தின் புதிய மண்டபத்தின் கூரைத் திருத்தங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 123,220 பெறுமதியான 82 அஸ்பெஸ்டொஸ் | முன்னைய வருடங்களில் பல சந்தர்ப்பங்களில் இப்புதிய மண்டபத்தின் திருத்தங்களுக்காக விலை மனுக் கோரப்பட்டு ஆனால் எவ்வித மனுதாரரும் திருத்த நடவடிக்கைகளுக்காக | கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| சீட்டுக்களுக்கான பணிகள் நிறைவேற்றப்படாமல் பாதுகாப்பின்றி நிறுவகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததடன் அவற்றில் அதிகளவானவை மீளாய்வாண்டின் போது சேதமடைந்திருந்தன. | சமர்ப்பிக்காமையால் திருத்த வேலைகள் தாமதமாகியது. இந்த திருத்தங்களுக்காக தேவையான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இந்த சீட்கள் அதற்காகப் பயன்படுத்தவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 வாகன முறைமை முகாமைத்தவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த இலக்கம் 40–3933 ஆன வாகனம் சட்டபூர்வமாக உரிமையாளரினால் நிறவகத்திற்கு கையளிக்கப்பட்டிராததுடன் 2015 ஆம் வருடத்திலிருந்து பாவனைக்குட்படுத்தப்படாது காணப்பட்டது. | இவ் வாகனம் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் இந் நிறுவக்த்திற்கு ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் உரிமை எமது நிறுவகத்திற்கு கையளிக்கப்படவில்லை. எனினும் உரிமையை கையளிப்பதனால் கடந்த வருடங்களிலிருந்து வாகன அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய அரசிற்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் என்பன செலுத்தப்பட வேண்டியதுடன் வாகனத்தின் தற்போதைய நிலைமை மற்றும் பெறுமதியின் பிரகாரம் நிறுவகத்திற்கு அது சாதகமற்றது. இந்த வாகனத்தை மீளப் பெற்றுக் கொள்ளுமாறு அந் நிறுவனத்திற்கு தெரியப்படுத்தி அனுப்பபட்டுள்ளது. இற்றை வரையில் அந்த நிறுவனத்தின் பதில் கிடைக்கவில்லை. | வாகனத்தின் உரிமை கையேற்கப்பட்டு திருத்த வேலைகள் செய்யப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்.**

**4.1 வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் வருட வருடாந்த செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2019 ஆம் வருடத்தின் வருடாந்த அறிக்கை அமைச்சரவையின் அனுமதிக்காக விவசாய இராஜாங்க அமைச்சிற்கு 2021 மார்ச் 04 இல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் வருடத்தில் காணப்பட்ட Covid 19 தொற்று நோய் சூழ்நிலை காரணமாக வருடாந்த | காலதாமதமின்றி வருடாந்த அறிக்கை பராளுமன்றத்திற்குச் சமாப்பிக்கப்படல் வேண்டும். |

அறிக்கை தயாரித்தல் மற்றும் நிர்வாகக் குழுவின் அனுமதி பெறப்படுவதற்கு தாமதமாகியது. நிறவகத்தின் அனுமதி பெறப்பட்டதும் விரைவில் 2019 இன் வருடாந்த அறிக்கை பாராளுமன்றததிற்குச் சமர்ப்பிப்பதற்கான தேவையன நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் வருடத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 2019 ஆம் வருடத்தில் தொடங்கப்பட்டு 2020 ஆம் வருடத்தில் முடிக்கப்பட வேண்டிய 11 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக ரூபா 8,366,000 செலவிடப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அவை பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்கள் தொடர்பாக வேறு வேறாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கியதாக பணிகள் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | கொள்கை வகுப்பாளர்களுக்கு விவசாயப் பிரிவிற்கான தற்போதைய கொள்கைகள் மற்றும் புதிய கொள்கைளில் மேற் கொள்ளப்பட வேண்டிய தேவையான மாற்றங்கள் மற்றும் அது தொடர்பான தகவல்களை வழங்கும் நோக்குடன் 2020 ஆம் வருடத்தில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் நிறுவனப் பிரசுரங்கள் (Institute Publications) என்பவற்றுங்களுக்காக ரூபா 0.90 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஒதுக்கங்களைப் பயன்படுத்தி எவ்வித பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவிலலை. | இந்நிலைமைக்கான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கியதாக பணிகள் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | நிறுவகத்தின் முதன்மைப் பணியான ஆராய்ச்சி செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு உருவாக்கப்படுகின்ற ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்கள் மற்றும் புதிய அறிவு தேவைப்படுகின்ற தரப்பினருக்கு வழங்குவதற்காக இனங்காணப்பட்ட செயற்திட்டம் வருடாந்தம் அல்லது குறிப்பிட்ட | நிறுவனத்தின் மூலம் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகளைப் பிரசுரித்தல் (Research Colloquium) 2015 ஆம் வருடத்தில் இறுதியாக மேற்கொள்ளப்பட்டது. ஆனால் பல்வேறு தரப்பினர்கள் அழைக்கப்படுகின்றபோது அத்தரப்பினரின் பங்கேற்பு | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கியதாக பணிகள் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

காலத்திற்கொரு தடைவை முறையாக மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டதுடன் 2017,2018,2019 மறறும் 2020 ஆம் வருடங்களில் ஆராய்ச்சி அறிக்கைகளைப் பிரசுரித்தல் பணிகளுக்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் ஒதுக்கங்கள் ஒதுக்கப்படுதல் மேற்கொள்ளப்படவில்லை.

நூற்றுக்கு 20 வீதத்திற்கும் குறைந்த அளவில் காணப்பட்டமையால் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்கள் மற்றும் புதிய அறிவு தேவைப்படுகின்ற தரப்பினருக்கு வழங்குவதற்காக பல்வேறு செயற்திட்டங்கள் 2016 ஆம் வருடத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்டன.